# இந்தி கட்டாய பாடமா?

## இந்தப்புத்தி வந்ததேன்?

—:o:—

## தங்களைப் பிடித்த சனியா?

## தமிழ்நாட்டைப்பிடித்தசனியா?

அடக்குமுறையைக் கைக்கொண்ட ஆச்சாரியாரே! வெள்ளையர்கண்டு எள்ளிநகையாடு முன் அன்பு முறையைக் கொள்ளலாகாதா?

இந்தியை எதிர்ப்பவர்களெல்லாம் அரசியல் விரோதிகளின் மற்றோர் அவதாரமென்பது,

காமாலைக் கண்ணுக்குக் காண்டதெல்லாம் மஞ்சள் நிறமென்பது போலவில்லவா!

இன்று தமிழ் நாட்டில் மூண்டெழுந்து நிற்கும் இந்தி எதிர்ப்புப் போர் எந்த நிலையில் எவர்களால் எப்படி நடக்கிறதென்பது தங்களுக்குக் கொஞ்சமும் மூளையில் ஏறவில்லையே? அது தங்களைப்பிடித்த சனியனா? அல்லது தமிழ் நாட்டு காங்கரஸ்காரர்களையெல்லாம் பிடித்த சனியனா? என்பது விளங்கவில்லை.

"தன்னைப்பெற்ற தாய் பிண்ணிப்பிச்சை எடுக்கையில் தனயன் கோதனம் செய்கிறானா" மென்பதுபோல் தாய்மொழியே கட்டாயப் பாடமல் திண்டாடும்போது இந்தியை என்ன கேட்டிற்காக கட்டாய பாடமாக வைக்க எண்ணினீர்?

ஒரு வகுப்பில் படிக்கும் மாணவர்களில் சிலபேர் தமிழ் பாஷையை இகழ்ச்சியாக நினைத்து ஊன்றிக் கவனியாமல் தமிழாசிரியர்களைக் கேவலமாக நடத்துவதும் சில பார்ப்பனப் பிள்ளைகள் அறவே தமிழைப் படியாமல்சமஸ்கிருதம் எடுத்துக் கொண்டு படிப்பது இன்னும் ஒழியவில்லையே.

தமிழ்ப் படியாத பார்ப்பனப் பிள்ளைகள் பிற்காலத்தில் ஆசிரியர்களாய் வந்து இப்பொழுது தாங்கள் உத்திரவு பிறப்பித்தபடி எல்லா பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்கப் புகுந்தால் தமிழ் மொழி எவ்வளவு அழகாக வளர்ச்சியுறுமென்பது வியப்பாயிருக்கிறது.

### தங்கள் சூழ்ச்சி அபாயகரமானது.

தாய் மொழி வளர்ச்சியுறாத நாடுகள் ஏதாவது முன்னுக்கு வந்ததுண்டா? ஆதியில் தமிழ் நாட்டில் புகுந்து தமிழர்களை அடிமையாக்கச்செய்த ஆரிய சூழ்ச்சிகளைவிட தாங்கள் செய்யும் சூழ்ச்சி அபாரமாயிருக்கிறதே.

இந்தியைக் கட்டாய பாடமாக்கினால் பிற்காலத்தில் சட்டசபைக்கு வரும் அங்கத்தினர்கள் எல்லோரும் இந்தியிலேயே பேசலாம் என்று தங்கள் குழுவினர்கள் சொல்லுவது பொருந்துமா? நூற்றைம்பது ஆண்டுகளாக ஆங்கிலம் ஒவ்வொரு நடுத்தரப்பாடசாலைகளிலும் உயர்தரப் பாடசாலையிலும் கலாசாலையிலும் வைக்கப்பட்டு எல்லா மாணவர்களும் பெரு விருப்போடு கற்றும இன்று சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோருக்கும் ஆங்கிலம் தெரிகிறதா?

"ஆங்கிலம் தான் அன்னிய பாஷை அவ்வளவு சுலபமாகப் பேச முடியாதென்று கருதுவீரானால் இந்தி சுலபமாகப் பேச தமிழர்கள் வாயில் நுழையுமா? அன்றி சுலபமாக எழுதத்தான் முடியுமா? ஒவ்வொரு எழுத்தையும் சித்திரம் வரைவதுபோல் எழுதித்தொலைக்க வேண்டுமே! ஏனய்யா அவ்வளவு துன்பம். எழுதுவதற்கும் பேசுவதற்கும் சுலபமான ஆங்கிலத்தை விட்டுவிட்டு எதற்காக பாழாய்ப் போன இந்தியைக் கற்க வேண்டும்?

அப்படித்தான் முயன்று கற்றாலும் அப்பாஷையில் ஆங்கிலத்தில் இருப்பது போல் விஞ்ஞான ஆராய்ச்சிக் கலைகள் ஏதாவதுண்டா? விஞ்ஞான நுட்பங்களைத் தமிழர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நேராக ஆங்கிலத்தில் கற்க வேண்டும் அல்லது ஆங்கில வல்லுனர்களால் மொழிபெயர்த்த நூல்களைப் படிக்க வேண்டும்.

அப்படி மொழி பெயர்ப்பு நூல்கள் தமிழில் அல்லது இந்தியில் இருக்க வேண்டும். இந்தியில் மொழிபெயர்த்துப் படிப்பது தலையைச் சுற்றி மூக்கைப் பிடிப்பது போலல்லவா! ஒரு தமிழன் இந்தி கற்று ஆங்கில விஞ்ஞான நூல்களை இந்தி மொழிபெயர்ப்பில் படிப்பதை விடத் தமிழ் மொழிபெயர்ப்பில் படிப்பது சுலபமல்லவா.

ஆங்கிலத்தை நீக்கி இந்தி கற்றால் எத்தனை விஞ்ஞான சாஸ்திரிகள் தாங்களே சுய அறிவைக் கொண்டு விஞ்ஞான ஆராய்ச்சி செய்து இந்தி மொழியில் வெளியிட்டிருக்கிறார்கள்? "பழைய குருடி கதவைத்திறடி" என்பது போல் நீங்கள் எவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்தாலும் ஆங்கிலம் படியாவிட்டால் நாடு முன்னேற்றமடையுமா?

ஆங்கிலத்தை நீக்கி விட்டால் உங்கள் பார்ப்பன கோஷ்டியார் "எங்கள் பாஷை தேவ பாஷை; சூத்திரர்கள் படிக்கக் கூடாதென்று" தமிழர்கள் கல்வியறிவைப் பாழ்படுத்தக் குறைந்தவர்களா? தாய் மொழியில் இன்னும் கையெழுத்துக் கூடப் போடத் தெரியாத கோடிக் கணக்கான கிராமவாசிகளான தமிழர்கள் இந்தி படித்தா கல்வியறிவைப் பெறப் போகிறார்கள்?

### இந்தியால் கிராமவாசிகளுக்கு நலமில்லை.

இந்தியைப் போல எத்தனை வம்பாடி பாஷைகளைத் தமிழ் நாட்டில் புகுத்தினாலும் கிராம மக்கள் ஒரு சிறிதும் பயனடைய மாட்டார்கள் என்பது திண்ணம். ஆனால் தமிழைக் கட்டாய பாடமாக ஏற்படுத்தி இந்தி கற்பிக்கச் செய்யும் முயற்சியையும் பணத்தையும் தமிழ் நாட்டுக் கிராமங்களில் செய்தால் கூடிய சீக்கிரம் கிராமவாசிகள் கல்வியறிவைப் பெறுவது திண்ணம். அதை விட்டு விட்டு ஏனய்யா ஒன்றுக்கும் உதவாத சனியன்பிடித்த வம்பாடி பாஷையைப்புகுத்தி தமிழ் நாட்டு ஏழைகளின் வரிப்பணத்தைப் பாழ்படுத்துகிறீர்?

இந்த மூட்டுப் பிடிவாதம் வேண்டாமய்யா ஆச்சாரியாரே. மற்ற மாகாணங்களையெல்லாம் விட தமிழ்நாட்டில் காங்கரசுக்கு அதிகமான ஆதரவு உண்டு என்பது தங்களுக்குத் தெரியும்? ஆனால் இன்று நீங்கள் செய்யும் அடக்கு முறை ஆட்சியால் உங்கள் யோக்கியதை ஒழிய இன்னும் அதிகாரங்களில்லையென்பதை நம்புங்கள்.

### காங்கரஸ் மானம் போகிறதே!

காங்காசை இவ்வளவு காலம் வலுவான-கட்டுப்பாடான ஒரு பெரிய கட்சி என்று வெள்ளையர்கள் நினைத்துக் கொண்டு இருந்ததற்கு மாறாக இன்று தாங்கள் செய்யும் அடக்கு முறை ஆட்சியால் கெட்டு விட்டது.

தமிழ்நாட்டில் காங்கரசுக்கு பொதுஜன ஆதரவு குறைந்து கூடிய சீக்கிரம் காங்காசை எதிர்க்கும் ஒரு பெரிய கட்சி ஏற்படுவது திண்ணம். அப்படியேற்படின் "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பது போல வெள்ளையர்கள் அல்லவா தங்கள் நலத்துக்குப் பலம் தேடிக்கொள்ளுவார்கள்.

இந்த நுட்பங்கள் தங்கள் மூளையில் என் ஏறவில்லை? இப்பொழுது காங்காஸ் மந்திரிகளுக்குப் பிடிக்கும் கறுப்புக் கொடியைக் கண்டு வெள்ளையர்கள் எள்ளி நகையாடுவது தங்கள் கோஷ்டியாருக்கு ஒருக்கால் தெரியாமலிருக்கலாம். தாங்களே "நாங்கள் ஏற்படுத்தின மதுவிலக்கு, கடன் நிவாரண மசோதா முதலிய பெரிய திட்டங்கள் வெற்றிகரமாக நடந்தேறி விட்டன, இந்தி விஷயமான சிறிய திட்டத்திற்கு இவ்வளவு எதிர்ப்பது உண்டாய் விட்டது என்று சொல்லுகிறீர்களே! தாங்களே இந்தி விஷயம் சிறியதிட்மென்றால் இந்த அற்ப விஷயத்தை எதற்காக இவ்வளவு பிடிவாதத்தோடு புகுத்துகிறீர்கள். "எங்களை எதிர்க்கும் அரசியல் விரோதிகளின் மற்றோர் அவதாரம் இந்தி எதிர்ப்பு" என்று வாய் கூசாமல் சொல்லுகிறீர்களே அது உண்மையா? இத்தக்கடிதம் எழுதும் நானும் என்னைச்சேர்ந்த பலரும் தங்கள் அரசியல் எதிரிகளா? நாங்கள் எல்லாம் உண்மையான காங்காஸ் அபிமானிகள் என்பது திருப்பூரில் அநேகமாக எல்லோருக்கும் தெரியும்.

எங்களைச் சேர்ந்த ஒருவர் சத்தியாக்கிரகத்தின்போது தடியடி பட்டு ஜெயிலுக்கும் போயிருக்கிறார். அவ்வாறு இருக்க நாங்கள் எப்படி தங்கள் அரசியல் எதிரிகளாவோம்.

எனக்குத் தெரிந்த பலரிடம் பேசியதில் இந்தி கட்டாயப் பாடத்தை வெறுக்காதவர்களே கிடையாது. நாங்கள் எல்லாம் காங்காசை முழு மனதோடு ஆதரிப்பவர்கள். தாங்கள் இந்தியைப்புகுத்தி எங்களைப்போன்ற அநேக காங்காஸ் அபிமானிகளின் மனதைப் புண்படுத்தி விட்டீர்கள். இந்தி கட்டாயபாடத்தை மாற்றி தமிழைக் கட்டாயபாடமாக ஏற்படுத்தி வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களையும் பிழையற தமிழ் மொழியை கற்கும்படி செய்தால் தங்களை வாழ்த்தாத தமிழர்களே இருக்கமாட்டார்கள்.

இப்பொழுது தாங்கள் கருதுவதுபோன்ற அரசியல் எதிரிகள் எல்லாம் பேசாமல் வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்து விடுவார்கள். தங்களுக்குள்ள அதிகார மமதையால் இந்தியை எதிர்ப்போர்கள் எல்லோரையும் 'மடையர்கள் அறிவிலிகள், அரசியல் விரோதிகள்" என்றெல்லாம் பேசுகிறீர்கள்.

"காமாலைக் கண்ணனுக்கு காண்பதெல்லாம் மஞ்சள் நிறமெ"ன்பதுபோல் இந்தியை எதிர்ப்போர்கள் எல்லாம் தங்கள் அரசியல் எதிரிகளாய் விட்டார்கள். இதுவும் தங்களைப் பிடித்த கெட்டகாலத்தின் அறிகுறியே போலும்.

தாங்கள் நினைப்பதுபோல் தங்கள் அரசியல் எதிரிகளுக்கும் இந்தி கட்டாயபாடம் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை உண்டாக்கி விட்டது தங்களுடைய கெட்டகாலம் போலும். இந்த அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்கு வலிமை வாய்ந்த ஆயுதம் இந்தி கட்டாயப்பாடத்தை கைவிடுவதே.

ஆங்கிலம் வந்தபோது பேசாதிருந்த தமிழர்கள் இந்தி வரும் போது ஏன் கூச்சலிடுகிறார்கள் என்று சொல்லி காலித்தனம் பண்ணும் உங்கள் சுயராஜ்ய கோஷ்டியார் வெள்ளையர்கள் இந்த நாட்டிற்குள் வரும்போது ஏன் சும்மா இருந்து இன்று ஆங்கில ஆட்சி வேண்டாம், சுயராஜ்யம் கொடுங்கள் என்று சுயராஜ்யப் போர் செய்கிறார்கள் என்பது விளங்கவில்லை.

"புத்தம் புதிய கலைகள் பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும், மெத்த வளருது மேற்கே அந்த மேன்மை கலைகள் தமிழினில் இல்லை" என்ற பாரதியார் மொழிப்படி ஆங்கிலத்தையே கற்று அதனையே பொதுமொழியாக வழங்க தமிழர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நல்ல தமிழ்-ஆங்கில அறிஞர்களைக் கொண்டு அங்கில விஞ்ஞான சாஸ்திரங்களை மொழிபெயர்த்துக் கொண்டு எல்லாப் பள்ளிகளிலும் மாணவர்களுக்குப் போதித்தும் எல்லா பாடசாலைகளிலும் தமிழைக் கட்டாய பாடமாக எல்லா மாணவர்களையும் படிக்கும்படி செய்து தமிழை வளர்த்தால் தங்கள் புகழ் குன்றின்மேலிட்ட விளக்குப் போல் பிரகாசிக்கும். தமிழ்த்தாயும் தங்களுக்கு நீண்ட ஆயுளை வழங்கி ஆசிர்வதிப்பாள்.

கே. ஆர். மாரியப்பன்
காட்டன் மார்க்கட்டு ரோடு
139/8 திருப்பூர்

---

## திருவள்ளூர் பஞ்சாயத்து போர்டு தேர்தல்.

திருவள்ளூர், ஜுன். 30-

28-6-38 செவ்வாய்கிழமை திருவள்ளூர் பஞ்சாயத் போர்டு தேர்தல் நடந்தது. மேற்படி தேர்தலில் திருவள்ளூர் ஜும் ஆ பஜ்ஜிக் முத்தவல்லியும் மேற்படி முஸ்லிம் லீக் காரியதரிசியும் ஆகிய ஜனாப் எம். அப்துல் ரகுமான் சாகிபு அவர்கள் காங்கரஸ் போட்டியில் பெரு வாரியான ஓட்டுகளால் வெற்றி பெற்றதுமல்லாமல் மேற்படி போர்டில் மெஜாரிடியையும் கைப்பற்றிக் கொண்டார். மேற்படி போர்டு தேர்தலில் பலமான போட்டி இருந்தும் காங்காசுக்கு தோல்வி ஏற்பட்டது குறிப்பிடதக்கது.

## திருச்செங்கோடு இந்தி எதிர்ப்புக் கூட்டம்

(ஒரு நிருபர்)

திருச்செங்கோடு, ஜுன் 29

28-6-38 மாலை 6 மணிக்கு இவ்வூர் நாற்பதுகால் மண்டபத்தின் முன் தோழர் எம். விஸ்வநாத முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்திற்குச் சுமார் 1000 ஜனங்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தனர்.

அது சமயம் தோழர் பி. என். வரதராஜுலு அவர்கள் இந்தி எதிர்ப்பு தமிழ் கீதம் பாடினார். தோழர் கிருஷ்ணானந்தா அவர்கள் "இந்தியும் தமிழர் கடமையும்" என்பதுபற்றி நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப்பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

## எடையக்காட்டூரில் தீவிபத்து

### ஏழைகள் தவிப்பு

(ஒரு நிருபர்)

எடையக்காட்டூர், ஜுன். 29.

28-6-38ந் தேதி இரவு நடுநிசியில் இவ்வூரில் ஏற்பட்ட தீவிபத்தால் ஒரு வரிசை கூரைவீடுகள் எல்லாம் சாம்பலாயின. ஒரு